DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 738/2023

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | லட்சுமி |
| Husband's Name | : | சுப்பிரமணியம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.02.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், மணப்பாறையில் குடியிருந்துகொண்டு இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். சுமார் 4,5 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை. எனது கணவர் தேர்வு எழுதுவதற்காக திருச்சியிலிருந்து கரூருக்கு இருசக்கர வாகனத்தில் வந்தார். அப்போது வெங்ககல்பட்டி அருகே

வந்தபோது, ஆம்னி வேன் எனது கணவர் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதாக எனது கணவர் எனக்கு போன் செய்து சொன்னார். அவருக்கு வலது நெற்றியில் ரத்த காயம் ஏற்பட்டது. பின்னர், ஆம்புலன்ஸ் மூலமாக கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தனர். நான் எனது கணவரை மருத்துவமனையில் சென்று பார்த்தேன். பிறகு எனது கணவரை சிகிச்சைக்காக மணப்பாறையிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு சென்றோம். சிகிச்சை முடிந்து தாந்தோன்றிமலை காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. **புகார் மனுவிலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் கடந்த 13.02.2023 அன்று எனது கணவர் ஆசிரியர் தேர்வு எழுதுவதற்காக சுமார் 12.00 மணியளவில் திண்டுக்கல் – கரூர் பைபாஸ் ரோட்டில் வெங்ககல்பட்டி சர்வீஸ் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அவருடைய ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தில் சென்றபோது, அவருக்கு முன்னால் சென்ற ஆம்னி வேன் ஓட்டுனர் எந்தவித சைகையும் செய்யாமல் திடீரென இடதுபுறம் திரும்பியதால் வேனின் பின்பக்க பம்பர் மோதி எனது கணவர் கீழே விழுந்துவிட்டார் எனவும், அவருக்கு இடது கண் புருவத்தில் ரத்தகாயமும், வாயில் ரத்த காயமும், கை, கால்களில் சிராய்ப்பு காயமும்ஏற்பட்டதாகவும் அருகிலிருந்தவர்கள் கரூர் ஜிஎச்சில் சேர்த்ததாகவும் தகவல் தெரிந்து நான் சென்றதாகவும் பின்னர், அன்றைய தினம் 07.00

மணியளவில் மணப்பாறை கலையரசன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், எனது கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியவரை பற்றி விசாரித்தபோது, TN 47 AL 3850 ஆம்னி வேனின் ஓட்டுனர் நாகப்பன் என தெரியவந்ததாகவும், பின்னர் தாந்தோணிமலை காவல் நிலையம் வந்து மேற்படி நபர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்ததாகவும் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு ஆதாயத்திற்காக அரசு தரப்புக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 738/2023

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | சுப்பிரமணியம் |
| Husband's Name | : | பழனிச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.02.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், ஆணையூரில் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை, மணப்பாறையிலிருந்து காக்காவாடிக்கு தேர்வு எழுதுவதற்காக எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். அப்போது எந்த இடம்

என்று சரியாக நினைவில்லை, எனக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த ஆம்னி வேன் எவ்வித சிக்னலும் போடாமல் இடது பக்கம் திரும்பியதால் எனது இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது. எனக்கு இடது கண் புருவம் மற்றும் கை கால்களில் அடிபட்டது. அருகிலிருந்தவர்கள் என்னை கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டுபோய் சேர்த்தார்கள். தகவல் கேள்விபட்டு எனது மனைவி என்னை வந்து பார்த்தார். என்னை மணப்பாறையிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுபோய் சேர்த்தார்கள். பின்னர், எனது மனைவி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். விபத்து நடந்தவுடன் நான் மயக்கம் அடைந்துவிட்டதால் என்னை யார் மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. என்மீது மோதிய ஆம்னி வேனின் பதிவு எண்ணையும், அதன் ஓட்டுனரையும் நான் பார்க்கவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**